செய்தி வெளியீடு எண்.880 நாள்.20.10.2008

# செய்தி வெளியீடு

ஹைதராபாத் நகரில் ஐ.பி.எஸ் (இந்திய காவல் பணி) போலீஸ் அகதெமியில் 2008–ம் ஆண்டு ஐ.பி.எஸ் (இந்திய காவல் பணி) பயிற்சி பெற்ற 60 பேருக்கு அக்டோபர் 15–ம் தேதி அன்று நடைபெற்ற தெற்கு மண்டல பண்பாட்டு இரவு நிகழ்ச்சியில் தமிழகத்தின் மதுரையைச் சார்ந்த சோமசுந்தர குழுவினர் கரகம் போன்ற நாட்டுப்புற நாட்டிய நிகழ்ச்சிகளை பிரமிக்கதக்கவிதத்திலும், மனமகிழ்ச்சியூட்டும்விதத்திலும் நடத்தி கூடியிருந்த போலீஸ் பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களை கவர்ந்தனர். இவர்களின் விதவிதமான வித்தைகளையும், உத்திகளையும் கண்டு இந்நிகழ்ச்சியை வழங்குவதற்கு காரணமாயிருந்த தமிழகத்தின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களுக்கு, இந்த கலை நிகழ்ச்சிகள் தெற்கு மண்டல பண்பாட்டு இரவின் மகுடமாக அமைந்தது என்று சர்தார் வல்லபாய்பட்டேல் தேசிய காவல் அகதெமியினர் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளார்கள்.

(வெ. இறையன்பு),
அரசுச் செயலாளர்.

**************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.